# ஆவணி மாத குடும்ப தின நற்செய்தி

## *“இறைபுத்திரத்ததன்மையின் உரிமை: பூரண அன்பை அனுபவிப்பது”*

01. ஆரம்பப் புகழ்ச்சி
புபுது பாடல் இல “ஞானம் வீரம் சக்தி ….”

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்
**“மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை மாறாக கடவுளின் பிள்ளைக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள். அதனால் நாம் “அப்பா தந்தையே” என அழைக்கின்றோம். நாம் இவ்வாறு அழைக்கும் போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூயஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்கு சான்று பகர்கின்றார். நாம் பிள்ளைகளாயின் உரிமைப்பேறு உடையவர்களாய் இருக்கின்றோம்”**

மனிதப் பாவத்தன்மையை உரிமையாக்கிக் கொண்டு இவ்வுலகின் பிறந்த உங்களுக்காக எனக்காக கடவுளின் அன்பு எத்தகையது என்பதை எமது அனுபவத்தால் அறிவோம். அப்பா தந்தையே – அப்பா அன்னையே என அவரை விழிப்பதற்கு இயேசு ஆண்டவருக்குள்ள உரிமை உங்களுக்கு எனக்கு பரிசாக்கி பூரணமான அன்பை அனுபவிப்பதற்கு இறைபுத்திரத்தன்மையின் அழைப்பை உரிமையாக்கிக் கொடுத்திருப்பதையிட்டு இறைவனைப் புகழ்வோம். எவருக்கும் எக்காலத்திலும் புரிந்து கொள்ள முடியாத அந்த மறை இரகசியம் பூரண அன்பை அனுபவிப்பதற்கு எமக்குக் கிடைத்துள்ள பாக்கியமான நிலையோடு இன்று தினம் புகழ்ச்சிக்குள்ளாகுவோம்.
புபுது சிங்கள பாடல் இல 146

03. மீளப்பார்த்தல்

i. கடந்த மாதம் பூராக நாளாந்த நிகழ்வுகள் அனுபவங்களினுள் கடவுளின் தந்தை – தாய் அன்பினை நீங்கள் அனுபவித்தீர்களா?
ii. திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசுவில் உங்களுக்கும் உள்ள தாகம் எத்தகையது? அவருக்கு முன்பாக தோன்றி நிற்பதற்கு உங்களுக்கு முடிந்ததா?
iii. திவ்விய பலிப்பூசையின் போது திவ்விய நற்கருணை எழுந்தேற்றத்தின் கணம் உங்களது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் கணம் என்பதை அனுபவித்தீர்களா?

04. நாளுக்குரிய நற்செய்தி

தந்தையினது தாயினது அன்பு அளவுகோளினால் அளக்கவோ விபரிக்கவோ முடியாதொன்றாம். ஆனாலும் தந்தையின் - தாயின் அன்பை அனுபவிப்பது எவ்வளவு புதுமையானது? இறைவனின் தந்தை – தாயன்பு அப்படியாக இல்லையா?

எசாயா 66: 13 **“தாய் தன் பிள்ளையைத் தெற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்”**

எசாயா 49: 15 **“பால் குடிக்கும் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உங்களை மறக்க மாட்டேன்”**

2சாமுவேல் 7:14 **“நான் அவனுக்கு தந்தையாய் இருப்பேன் அவன் எனக்கு மகனாய் இருப்பான் அவன் தவறு செய்யும் போது மனித இயல்புக்கேற்ப அடித்து மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன்”**

மேற்கூறப்பட்ட வார்த்தைகளை நாம் எத்தனை முறை தியானித்தாலும் அது தித்திக்காத தேனாய் இருப்பது இறைவனின் தந்தை – தாயினது அன்பை நாளாந்தம் விதம் விதமாக அனுபவிக்கின்ற படியினாலாகும்.

- ❖ பிள்ளையின் வாழ்வில் நடைபெறும் சகலவித அனுபவங்களிலும் தாயன்பு பிரகாசிப்பது அவளது செவிமடுத்தல்.
  மன்னிப்பளித்தல் - ஏற்றுக் கொள்ளல் - ஆறுதல் அளித்தலினூடாகவாகும். ஒருவரை குணப்படுத்துவதற்கு விடுதலைக்குவதற்கு விட்டுக் கொள்வதற்கு அவனுடைய தாயன்பு ஏதுவாகும்.

- ❖ மிரட்டினாலும் தண்டித்தாலும் தந்தையினது பாதுகாப்பு கவனிப்பு அரவணைப்பு ஒரு தாய் தனது பிள்ளைகளுக்கு காட்டும் அன்பை விட மாற்று விதமான முறையில் அன்பு செய்யும்

- ❖ இறைவனின் தந்தை தாயன்பை அனுபவிக்க வேண்டுமேயானால் நான் இயேசு ஆண்டவர் இறைவனின் தந்தை தாயன்பை அனுபவித்த விதத்தை உற்று நோக்க வேண்டும்.

- ❖ கடவுளின் பூரண அன்பான தந்தை – தயன்பை அனுபவித்த அனுவித்த அனுபவமானது, கடவுளது விருப்பத்திற்கேற்ப பலியாகுவதற்கு இல்லாமலாவதற்கு தனது சுயவிருப்பத்திலேயே தன்னை அர்ப்பணித்ததாகும். கடவுளது அன்பிலிருந்து இயேசு ஆண்டவரைப் பிரிக்க முடியாமல் போனதன் காரணி கடவுளது தந்தை – தாயன்பின் வாழ்க்கை முழுமையாக நிரம்பியிருந்ததேயாகும்.

05. எம் பேரில் : உரோமையர் 8:35

**“கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியாக இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?”**

- ❖ இறவனது அன்பிலிருந்து இயேசு ஆண்டவரை பிரிக்க முடியாமல் போனதன் காரணம் அவர் அப்பா தந்தையினது – தந்தை – தாயன்பில் நிரம்பியிருந்ததினாலாகும். எம்மையும் அவ்வாறாக இறையன்பிலிருந்து பிரிக்க முடியாமல் போக வேண்டுமேயானால் நாமும் இறைவனது தந்தை – தாயன்பில் நிறைந்த வழிய வேண்டும்.

- ❖ துன்பம் பீடணை வேதனை அநாதரவான நிலை எம்மை எம் வாழ்வில் பிண்ணிப் பிணைந்து இருப்பினும் தந்தையாக தாயாக எம்மை அன்பு செய்யும் கடவுளை விசுவசிப்பதற்கு எமக்கு முடியுமேயானால் அவையனைத்துள்ளும் இறையன்பை அனுபவிக்க இயலுமேயானால் இறை புத்திரத்தன்மையின் உரிமையான பூரண அன்பினை எமக்கும் அனுபவிக்க முடியும்.

06. கலந்துரையாடலுக்காக

i. உரோமர் 8:35 உங்களது வாழ்வில் அனுபவமாகி உள்ளதா?

ii. இயேசு ஆண்டவர் அனுபவித்த கடவுளின் தந்தை தாயன்பை அனுபவிப்பதற்கு அழைப்பு பெற்றவரென்ற ரீதியில் உங்களது சான்று பகர்தல் எத்தகையது?

iii. இந்த வருடம் பூராகவும் அப்பா தந்தையே அப்பா அன்னையே என்று மகோன்னதமானவரை விழிப்பதற்கு நாம் பெற்ற அழைப்பினுள் கிறிஸ்து நாதரைப் போல பலியாகி இல்லாமலாக இறைவிருப்பத்திற்காக எமது உயிரையும் பராமரிப்பதற்கு எமக்கு அழைப்பொன்றுண்டு. எனவே அதற்கான வல்லமையை இறைஞ்சி நால்வர் கொண்ட சிறு குழுக்களாக பரிசுத்த ஆவியானவரின் ஸ்நாபனத்திற்காக செபிப்போம்.

07. இறுதிப்புகழ்ச்சி

புபுது பாடல் இல 150